# வழக்கத்திற்கு மாறானவற்றைக் கவனித்திடுங்கள்

விநோதமான அல்லது வழக்கத்திற்கு மாறான எதையாவது நீங்கள் கண்டால், உடனடியாக போலிசாருடன் தொடர்புகொண்டு தகவல் அளித்திடுங்கள்.



## பொருட்கள்

- கவனிப்பாரில்லாதவை
- வழக்கத்திற்கு மாறான வாடையை வெளியாக்குபவை
- மின்கம்பிகள் வெளியில் நீட்டிக்கொண்டிருப்பவை



## பழக்கவழக்கம்

- சந்தேகத்திற்குரிய முறையில் நோக்கமின்றி சுற்றித்திரிவது
- விநோதமான கேள்விகள் கேட்பது
- பாதுகாப்பு ஏற்பாடுகளை (எ.கா. உள்சுற்று கண்காணிப்புக் கருவி) வழக்கத்திற்கு மாறாகப் புகைப்படம்/காணொளி எடுப்பது
- உருவத்தைவிட மிகப்பெரிய அல்லது கனமான ஆடை அணிந்திருப்பது

## வாகனங்கள்

- வேகத்தைக் குறைக்காமல் கூட்டத்தை நோக்கிச் செல்வது
- ஒரே இடத்தை மீண்டும் மீண்டும் சுற்றி வருவது
- அளவுக்கதிக பாரம் ஏற்றப்பட்டிருப்பது
- வாகனத்தின் உள்ளே சந்தேகத்திற்குரிய பொருட்கள் இருப்பது



இன்றே **SGSecure** உடனடி உதவியாளராகுங்கள்!

மேல்விவரம் அறிய, **www.sgsecure.gov.sg** பார்க்கவும்.

**SGSecure** செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

# பயங்கரவாதத் தாக்குதல் நேரும்போது



## ஓடு

### ஆபத்திலிருந்து விலகி ஓடிவிடுங்கள்

ஆகப் பாதுகாப்பான பாதையைத் தேர்ந்தெடுத்து, விரைவாகவும் அமைதியாகவும் அங்கிருந்து வெளியேறி, தாக்குபவர்களின் பார்வையில் படாமல் இருங்கள். சரண் அடையவோ அல்லது பேரம் பேசவோ முயற்சி செய்யாதீர்கள். மற்றவர்களையும் உங்களோடு வரச்சொல்லி வற்புறுத்துங்கள். உங்களது உடமைகளை விட்டுச் செல்லுங்கள்.



## ஒளிந்து கொள்

### உங்களால் தப்பிச்செல்ல முடியாதென்றால், ஒளிந்து கொள்ளுங்கள்

ஒளிந்துகொண்டு, பார்வையில் படாமல் இருங்கள். தாக்குபவர்கள் உள்ளே நுழையாமல் தடுக்க, கதவுகளுக்குப் பின்னால் மேசைகள் போன்ற கனமான பொருட்களை வையுங்கள். கதவுகளிலிருந்து விலகி இருங்கள். மிகவும் அமைதியாக இருங்கள். உங்கள் கைப்பேசியை அமைதி நிலைக்கு மாற்றுங்கள்.

## தெரியப்படுத்து

### போலிசாரிடம் தெரியப்படுத்துங்கள்

பாதுகாப்பாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றினால்,999 எண்ணில் போலிசாரை அழையுங்கள். பேசுவது பாதுகாப்பில்லை என்றால், 71999 எண்ணுக்குக் குறுந்தகவல் அனுப்புங்கள். நீங்கள் இருக்கும் இடம், தாக்குபவர்கள் பற்றிய விவரங்களைத் தெரியப்படுத்துங்கள் SGSecure செயலியைப் பயன்படுத்தி போலிசாருக்குக் கூடுதல் விவரம், புகைப்படங்கள், காணொளிகள் அனுப்புங்கள்.




இன்றே **SGSecure** உடனடி உதவியாளராகுங்கள்!

மேல்விவரம் அறிய, **www.sgsecure.gov.sg** பார்க்கவும்.

**SGSecure** செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

# பயங்கரவாதத் தாக்குதல் நேரும்போது



## அழுத்து

இரத்தக்கசிவை நிறுத்த, கைக்குட்டை அல்லது துணி பயன்படுத்தி காயத்தின்மீது அழுத்துங்கள். (இரத்தக்கசிவு நிற்காவிட்டால், கட்டுங்கள்)

## கட்டு

அளவுக்கதிக இரத்தக்கசிவை நிறுத்த, கழுத்துப்பட்டை, இடைவார், தோள்பையின் நாடா போன்றவற்றைப் பயன்படுத்தி, காயம்பட்ட பகுதிக்குக் குறைந்தது 5 சென்டிமீட்டருக்கு மேலே கட்டுங்கள். இது கைகால்களில் உள்ள காயங்களுக்கு மட்டுமே பொருந்தும். (கட்டிய பிறகும் இரத்தக்கசிவு நிற்காவிட்டால், சுழல் உத்தியைப் பயன்படுத்துங்கள்).



## சுழல் உத்தி

**இரத்தக்கசிவு நிற்காவிட்டால் செய்யவேண்டியவை**

1. 

முதல் கட்டுக்குக் குறைந்தது 5cm மேலே கட்டவும்
2. 
இரண்டாவது கட்டின்மேல் ஒரு தடியை (பேனா அல்லது மரக்குச்சி) வைத்து முடிச்சு கட்டவும்
3. 
இரத்தக்கசிவு நிற்கும் வரை அந்தத் தடியை ஒரே திசையில் சுற்றவும்
4. 
தடி விலகாதவாறு ஒரு பாதுகாப்பான முடிச்சைப் போடவும்



## தெரியப்படுத்து

காயத்தைப் பற்றியும், காயம் கட்டப்பட்ட நேரத்தையும் குடிமைத் தற்காப்புப் படை அவசரகால முதலுதவியாளர்களிடம் தெரியப்படுத்துங்கள்.

இன்றே **SGSecure** உடனடி உதவியாளராகுங்கள்!

மேல்விவரம் அறிய, **www.sgsecure.gov.sg** பார்க்கவும்.

**SGSecure** செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

# தாக்குதலுக்குப் பிறகு




## நிதானமாக இருங்கள்

### தகவல் அறிந்திடுங்கள்

போலிசாரின் இணையத்தளம் அல்லது ஃபேஸ்புக் பக்கம், அரசாங்கத்தின் செய்தி அறிக்கைகள், SGSecure செயலி போன்ற அதிகாரத்துவ தளங்களிலிருந்து அண்மை விவரங்களையும் ஆலோசனைகளையும் தெரிந்து கொள்ளுங்கள்.




## வதந்திகளைப் பரப்பாதீர்கள்

### ஊகங்களைப் பரப்பாதீர்கள்

பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தக்கூடிய உறுதிப்படுத்தப்படாத காணொளிகளை அல்லது புகைப்படங்களைப் பகிர்ந்து கொள்ளாதீர்கள் அல்லது பதிவேற்றாதீர்கள்.



## மற்றவர்கள்மீது அக்கறை காட்டுங்கள்

### மற்றவர்கள் அன்றாட வழக்கநிலைக்குத் திரும்பிச்செல்ல உதவுங்கள்

உங்கள் குடும்பத்தினரும் நண்பர்களும் கூடிய விரைவில் அன்றாட வழக்கநிலைக்குத் திரும்பிச்செல்ல ஊக்கம் கொடுங்கள்.

இன்றே **SGSecure** உடனடி உதவியாளராகுங்கள்!

மேல்விவரம் அறிய, **www.sgsecure.gov.sg** பார்க்கவும்.

**SGSecure** செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.